இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை (இரண்டாம் அரையாண்டு) - **2006/2007**
**ESP 1110 -** ஆரம்பக் கல்வி
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 02.12.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. "ஆரம்பக்கல்வி" எனும் எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

2. 1997 முதல் இலங்கையில் அமுல் நடத்தப்படுத்தப்படும் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தின் முக்கிய மாற்றங்களை பட்டியற்படுத்துக.

3. இலங்கையில் ஆரம்ப ஆசிரியர் கல்வி, பயிற்சியின் தரவிருத்திக்காக முக்கியமான ஆலோசனைகள் மூன்றைக் குறிப்பிடுக?

4. 1992ன் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்ட தேசிய கல்வி நோக்கங்கள் ஐந்தை பட்டியற்படுத்துக?

5. கலைத்திட்ட முகாமைத்துவத்தில் ஆரம்ப ஆசிரியர் கவனிக்க வேண்டிய பிரதான காரணிகளை விளக்குக.

6. "மதிப்பீடு, கணிப்பீடு" க்கிடையிலான வித்தியாசத்தினை விளக்குக.

7. ஆரம்ப பாடசாலை ஆசிரியருக்கு உதவி ஒத்தாசைகள் தேவைப்படும் துறைகளையும், நடவடிக்கைகளையும் பெயரிடுக.

8. ஆரம்ப பாடசாலை மாணவர்களின் கற்றலை இலகுபடுத்துவதற்கும், உதவி செய்வதற்கும் பங்களிக்கும் காரணிகள் மூன்றைப் பெயரிடுக.

## பகுதி II

9. (I) ஆரம்ப பாடசாலை மாணவர்களின் விருத்திசார் இயல்புகளைப் பெயரிடுக.

(08 புள்ளிகள்)

(II) பிள்ளைகளை உயிர்ப்புள்ள கற்போர்களாக ஊக்குவிக்கக்கூடிய ஒரு சாதகமான கற்றல் சூழ்நிலையை உருவாக்கும் வழியை முன்மொழிக.

(12 புள்ளிகள்)

10. (I) இலங்கையின் பிரதிகூலமான நிலைமையை கடக்கும் குழுவைச் சேர்ந்த (most needy group) மாணவர்களினது ஆரம்ப கல்வியினை சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக இருக்கும் காரணிகளைப் பெயரிடுக.

(08 புள்ளிகள்)

(II) மேற்கூறப்பட்ட தடையாக அமையும் காரணிகளை நீக்கிக் கொள்வதற்கு அரச, சமுதாயம் மூலம் செய்யவேண்டிய வகிபங்கினை குறிப்பிடுக.

(12 புள்ளிகள்)

11. (I) "பூரண ஆளுமை விருத்திக்காக ஆரம்பக் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தல் அவசியம்" இக் கூற்றினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(II) ஆளுமை பருவ மாணவர்களின் பூரண ஆளுமை விருத்தியை உறுதிப்படுத்துவதற்கு ஆரம்ப ஆசிரியரின் பிரதான பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

12. (I) ஆரம்ப கல்வியின் தரத்தினை நிலைநிறுத்துவதற்கு இலங்கை அரசு தற்போது எதிர்நோக்கும் சவால்கள் எவை?

(10 புள்ளிகள்)

(II) மேற்கூறப்பட்ட சவால்களை வெற்றிகொள்ளுவதற்குச் செயற்றிட்டம் ஒன்றினைத் தயாரிக்க.

(10 புள்ளிகள்)

13. (I) ஆரம்பக்கல்வியில் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் பொதுவாக பிள்ளையிடம் இருக்கவேண்டிய தேர்ச்சிகளை விபரிக்க.

(08 புள்ளகள்)

(II) 21ம் நூற்றாண்டில் சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு ஆரம்பபருவ பிள்ளை விருத்தி செய்யக்கூடிய இயல்புகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

14. பின்வருவனவற்றுள் ஏதாயினும் மூன்று பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

I பாதுகாப்பிற்குரிய உரிமை
II பங்குபற்றலுக்குரிய உரிமை
III கட்டாயம் கல்விச் சட்டம்
IV ஜோண்டுயி (1859 – 1952)
V ஆரம்ப ஆசிரியர் ஒரு முகாமையாளராக

(பதிப்புரிமை பெற்றது)